உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டனில் கோடைப்பருவ வேடிக்கைகள்!

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 23, 2022) –வேடிக்கைகள் நிறைந்த பொழுதுபோக்கு வாய்ப்புகளை இந்தக் கோடைப்பருவத்தில் சமூகத்தினருக்கு வழங்குவதில் ப்ராம்ப்ட்டன் நகரம் பரவசமடைகிறது.

நகரத்தின் பல பொழுதுபோக்கு வசதிகளுக்கும் வருகை தந்து, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் கோடைக்காலம் முழுவதிலுமாக, விளையாடுங்கள் மற்றும் நீரில் அளைதல் செய்யுங்கள். காலஅட்டவணைகள், பதிவு விவரங்கள் மற்றும் வானிலை காரணமாக மூடப்படுதல், ஆகியவை தொடர்பான இயக்கச் செயல்பாட்டு நிலை அறிவிப்புகள் உட்பட அனைத்து தகவல்களுக்கும், www.brampton.ca/summerfun ஐப் பார்வையிடவும்

**புரொஃபெஸ்ஸர்ஸ் ஏரி மற்றும் எல்டோரடோ திறந்தவெளி நீச்சல் குளம்**

புரொஃபெஸ்ஸர்ஸ் ஏரியானது வானிலை அனுமதிக்கும் பட்சத்தில் ஜூன் 28 தேதி திறக்கவிருக்கிறது. ஏரி, கரையோரம் மற்றும் பீச் வால்லிபால் விளையாட்டு போன்ற திறந்தவெளி வசதிகளுக்கு சென்று மகிழுங்கள்.

வானிலை அனுமதிக்கும் பட்சத்தில், எல்டோரடோ பூங்காவில் இருக்கின்ற திறந்தவெளி நீச்சல்குளம் ஜூன் 30 தேதி திறக்கவிருக்கிறது. இதே பூங்காவில் இரண்டு விளையாட்டு மைதானங்கள், ஐந்து பிக்னிக் பகுதிகள் மற்றும் விளையாடுவதற்கான ஏராளமான இடம் ஆகியவற்றுக்கும் செல்லுங்கள்.

பதிவு செய்தல் பற்றிய தகவல்கள் மற்றும் நகரின் திறந்தவெளி நீச்சல்குளம் மற்றும் ஏரிக்கரையோர வசதிகள் பற்றிய  கூடுதல் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/summerfun.

**ஸ்ப்ளாஷ் பேட்கள் மற்றும் குழந்தைகள் அளைந்து விளையாடும் குளங்கள்**
நகரின் ஸ்ப்ளாஷ் பேட்கள் மற்றும் குழந்தைகள் அளைந்து விளையாடும் குளங்கள் இப்போது தினமும் திறந்திருக்கின்றன. வானிலை மோசமடைவதன்பேரில் இவை மூடப்படலாம்.  இயங்கு நிலை பற்றிய புதிய செய்திகளுக்கு வருகை தரவும்: www.brampton.ca/summerfun.

**கோடைக்கால முகாம்கள்**
6 க்கும் அதிகமான வயதுடைய பங்கேற்பாளர்களுக்கு வாராந்திர கோடைப்பருவ முகாம்கள் ஜூலை 4 முதல் ஆகஸ்ட் 26 வரை நடைபெறுகின்றன. அனைவருக்குமான முகாம்களும் இருக்கின்றன. திறந்தவெளி மற்றும் உள்ளரங்கத்தில் பல வகையான வேடிக்கைகள் மற்றும் விளையாட்டுக்கள் மற்றும்

செயல்பாடுகளை அனுபவித்து மகிழுங்கள். மேலும் அறிய வருகை தரவும்: www.brampton.ca/registerforprograms .

**நட்சத்திரங்களுக்கு கீழே திரைப்படங்கள்**

வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் செப்டம்பர் 1 வரை சிங்க்வாகவ்சி பார்க், மவுண்ட் ப்ளெஸண்ட் சதுக்கம் மற்றும் கார்டன் சதுக்கத்தில் இலவச, குடும்பத்திற்கு ஏற்ற திறந்தவெளி திரைப்படங்கள் திரையிடுவதைக் காண கலந்துகொள்ளுங்கள். உங்கள் சொந்த தின்பண்டங்கள், போர்வைகள் மற்றும் புல்வெளி நாற்காலிகளைக் கொண்டு வாருங்கள். இந்த ஆண்டிற்கான நட்சத்திரங்களுக்கு கீழேயான திரைப்படங்கள், மேப்பிள் லாட்ஜ் ஃபார்ம்ஸ் (Maple Lodge Farms), நோ ஃப்ரில்ஸ் ப்ராம்ப்ட்டன் (No Frills Brampton) மற்றும் டெலஸ் (Telus ) ஆகியோரால் தாராளமாக நிதியுதவி செய்யப்படுகிறது. முழு அட்டவணையை இங்கு பார்வையிடவும்:  www.brampton.ca/summerfun.

**பீல் கிராம கோல்ஃப் மைதானவெளி**

பீல் கிராம கோல்ஃப் மைதான வெளியில் உங்களுக்கான  நேரம் பதிவு செய்துகொள்ளுங்கள்; இதுவே ப்ராம்ப்ட்டன் நகரில் கோல்ஃப் விளையாடுபவர்களுக்கான உன்னதமான மைதானம். அனைத்து மட்டங்களிலுமான கோல்ஃப் வீரர்களுக்கு என்றே 9 (ஒன்பது) துளைகள் உள்ளன; அவற்றுக்காக விளையாடி மகிழுங்கள். மேலும் அறிய வருகை தரவும்: www.brampton.ca/peelvillagegolfcourse.

**பூங்காக்கள் பொழுதுபோக்கு ஓடுபாதைகள்**

பல பூங்காக்கள் மற்றும் இயற்கை பாரம்பரிய நிலங்களான பள்ளத்தாக்குகள் மற்றும் வனப்பகுதிகள் போன்ற பொழுதுபோக்கு பாதைகளை உள்ளடக்கியதே ப்ராம்ப்ட்டன் நகரம் ஆகும். ப்ராம்ப்ட்டனின் அழகிய திறந்தவெளிகளில் நடந்து செல்லுங்கள், ஓடுங்கள், பைக் சவாரி செய்யுங்கள் மற்றும் விளையாடி மகிழுங்கள். திறந்தவெளி டென்னிஸ் மற்றும் பிக்கிள் பால் மைதானங்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் பூங்காக்களில் திறந்தவெளி விளையாட்டுக்கள் விளையாடி, ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருங்கள். மேலும் அறிய: www.brampton.ca/summerfun.

**பூங்காவில் உடற்பொருத்தம்**

இந்தக் கோடையில் ப்ராம்ப்ட்டன் பூங்காக்களில் நகரின் இலவச திறந்தவெளிப்புற உடற்பயிற்சி வகுப்புகளில் சேருங்கள். கார்டியோ மற்றும் ஜூம்பா, குறைந்த தாக்கம் தருகிற உடற்பயிற்சி மற்றும் யோகா, சமநிலை மற்றும் ஆரோக்கியம் மற்றும் பலவற்றிற்கும் பதிவு செய்யவும். பங்கேற்பாளர்கள் ஒரு துவாலை, பாய் மற்றும் தண்ணீர் கொண்டு வர ஊக்குவிக்கப்படுகிறார்கள், உடற்பயிற்சிக்கு ஏற்ற வசதியான உடைகள் மற்றும் வானிலைக்கு ஏற்ற ஆடைகளை அணியுங்கள். மேலும் அறிய: www.brampton.ca/summerfun.

**இலவச கோடைப்பருவ நீச்சல்**

ஜூலை 4 முதல் செப்டம்பர் 1 வரை நகரம் முழுவதும் உள்ள பொழுதுபோக்கு மையங்களில் இலவச உள்ளரங்க பொது நீச்சல் குளங்களில் விளையாடி அனுபவியுங்கள். இலவச கோடை நீச்சல் பயிற்சி; இதற்கு டிம் ஹார்டன்ஸ் அமைப்பு தாராளமாக நிதியுதவி செய்கிறது. பதிவு தேவை; மேலும் அறிய www.brampton.ca/summerfun.

**அறிஞர் கூற்றுக்கள்**

"இதோ ப்ராம்ப்ட்டனில் கோடைப்பருவம் வந்துவிட்டது, அதேபோலவே கோடைகால வேடிக்கைகளும் கூடவே வந்துவிட்டன! முழு குடும்பமும் ரசிப்பதற்காக 2022 கோடையில் நகரின் பல்வேறு வகையான கோடைகால வசதிகள் மற்றும் நிகழ்ச்சிகள் வந்துவிட்டன; நிகழ்ச்சிகளுடன் சேர்ந்து நீங்கள் நடக்கலாம், நீந்தலாம், ஸ்ப்ளாஷ் விளையாடலாம்; மொத்தத்தில் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருங்கள்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரமானது, அழகிய பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு பாதைகள், வேடிக்கையான நடவடிக்கைகள் நிறைந்தது மற்றும் அனைவருக்கும் கோடைக்கால நிகழ்ச்சிகளை வாரி வழங்குகிறது. www.brampton.ca/summerfun இல் நகரத்தின் கோடைகால சலுகைகளை தேடிப்பிடியுங்கள்; எங்கள் சிறந்த நகரமான ப்ராம்ப்ட்டனில் உங்கள் கோடைகாலத்தை திட்டமிடுங்கள்."

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டனில் கோடைகால வேடிக்கைக்கான சிறந்த வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் அவற்றைப் பேணிப் பராமரிப்பதற்கும் நகர ஊழியர்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். அனைத்து வயதினருக்கும் அனைத்து திறன்கொண்டவர்களுக்கும் பல செயல்பாடுகள் மற்றும் வசதிகளை இந்த கோடையில் அனுபவியுங்கள்."

- *பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை செயல் அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

BRAMPTON

## Media Release

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் மாநகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca